செலவு செய்தது போக இதற்கென்று வேளாண்மைத் துறையில் நிதி இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை முடியுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *வேளாண் உற்பத்தியை ஸ்திரப்படுத்துவதற்கு நிதி இருக்கிறது. அதைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளவங்கோடு தொகுதியில் முந்திரி பதப்படுத்தும் தொழில் மையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். தற்போது, கடலூர் மாவட்டம், பண்ருட்டியில்தான் முந்திரி அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துறை அதிகாரிகளிடம் கலந்து பேசி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

64—

சார்–பதிவாளர் அலுவலகம் அமைப்பது குறித்து

***37748—திரு. ஏ.பி. நந்தகுமார்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் சார்–பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் சார்–பதிவாளர் அலுவலகம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

முற்பகல் 11–40

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி தனித் தாலுகாவாகப் பிரிக்கப்பட்ட பின் சற்றேறக்குறைய 50 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கியுள்ளது. அணைக்கட்டு, கங்கநல்லூர், ஊனை, ஊனை வாணியம்பாடி, டி.சி. குப்பம் மற்றும் மலையடி கிராமங்களான கீழ்கொத்தூர், வரதலம்பட்டு போன்ற கிராமங்கள் உள்ளன. ஏழையெளிய மக்கள் எளிதில் பத்திரப் பதிவு செய்யவேண்டுமென்றால், தாலுகாவாக உருவாக்கப்பட்ட பகுதியான அணைக்கட்டில் ஒரு சார்–பதிவாளர் அலுவலகம் வேண்டுமென்று நான் கேட்டேன். அணைக்கட்டு என்ற ஊர், அணைக்கட்டு என்ற தொகுதி, ஆனால் அணை இல்லை. தனித் தாலுகா. D.S.P. அலுவலகம் கிடையாது. தீயணைப்பு அலுவலகம் கிடையாது. மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டும் அங்கு மருத்துவர்கள் இல்லை. எங்களது பக்கத்து மாவட்டத்தினைச் சேர்ந்த இந்தத் துறையினுடைய அமைச்சர், சார்–பதிவாளர் அலுவலகம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இதனை மறுபரிசீலனை செய்து, அணைக்கட்டு ஒரு தனித் தொகுதி, ஒரு தனித் தாலுகா. எனவே, அந்த இடத்திலே ஒரு சார்–பதிவாளர் அலுவலகம் அமைத்துத்தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டுக்கு அருகில் இருக்கக்கூடிய தலைமை சார்–பதிவாளர் அலுவலகம் என்றால், பக்கத்தில் 10 கி.மீ. அல்லது 12 கி.மீ. தூரத்தில் உள்ள வேலூரில்தான் உள்ளது. அதுபோல், சுற்றுவட்டாரத்தில் உள்ள கடியம்பாடி, ஒடுகத்தூர் மற்றும் பள்ளிகொண்டா ஆகிய இடங்களில் 10 கி.மீ. அல்லது 15 கி.மீ. தூரத்தில் சார்–பதிவாளர் அலுவலகங்கள் அமைந்திருக்கின்ற காரணத்தினால் புதியதாக ஒரு சார்–பதிவாளர் அலுவலகம் அணைக்கட்டில் அமைக்கப்படும்பட்சத்தில், மக்களுக்கு சிரமங்கள் ஏற்படுகின்ற வாய்ப்புகள் உள்ளன. அதேசமயத்தில், அரசுக்கு வரவேண்டிய வருவாயில், இழப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பும் இருக்கின்றது. எனவே, தற்சமயம் அங்கு புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அமைக்கக்கூடிய வாய்ப்புகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

திரு. ஏ.பி. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது அணைக்கட்டு தொகுதியில் ஒடுகத்தூர், பள்ளிகொண்டா மற்றும் வேலூரில் சார்–பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்றன என்று கூறினார்கள். ஆனால், ஒடுகத்தூர், பள்ளிகொண்டா மற்றும் வேலூரில் இருக்கக்கூடிய சார்–பதிவாளர் அலுவலகங்களில் ஏழை எளிய மக்கள் தங்களுடைய பத்திரப் பதிவினை செய்ய போகின்றபோது– தற்போது online–ல் பத்திரப் பதிவு செய்கின்ற முறையினை அரசு அறிமுகம் செய்து வைத்திருக்கின்றது. ஒருசில இடங்களில் servers–ல் பிரச்சினை வருகின்ற நேரத்திலே, சற்றேறக்குறைய 4 அல்லது 5 மணி நேரம் காத்திருக்கக்கூடிய நிலை இருக்கின்றது. அங்கே சென்று நாம் பார்க்கின்றபோது, அந்தப் பத்திரப் பதிவு அலுவலகங்களில் மக்கள் தங்குவதற்கென்று ஒரு இடம் கிடையாது. சற்றேறக்குறைய தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சார்–பதிவாளர் அலுவலகங்களிலும் இதே நிலைதான். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தந்த பத்திரப் பதிவு அலுவலகங்களில் மக்கள் அமரக்கூடிய வகையில், இடவசதியைச் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல், பத்திரப் பதிவு அலுவலகங்களில் scanner இல்லை என்கின்ற சூழ்நிலை

2020 பிப்ரவரி 20]

இருக்கின்றது, Xerox Machine *இல்லை என்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. நான் அனைத்து இடங்களிலும் இல்லையென்று சொல்லவில்லை. என்னுடைய தொகுதியில், அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய ஒடுகத்தூர், பள்ளிகொண்டா மற்றும் வேலூரில் அந்த நிலை இருக்கின்றது. அந்த நிலையினை மாற்றி அந்த அலுவலகங்களில்* Xerox Machine, Scanner–*ஐ உடனடியாக இந்த அரசு அமைத்துத் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரையில், நான் அதே பகுதியில் வசிக்கக்கூடியவன். இதுவரையிலும் அதுபோன்ற குற்றச்சாட்டுகள் ஏதும் இல்லை. இவையெல்லாம் ஆரம்பகாலத்தில்* computerized *செய்யும்போது,* online *மூலமாகப் பதிவு செய்த காலத்தில், இதுபோன்ற நிலைகள் இருந்திருக்கலாம். ஆனால், தற்சமயம் இவையெல்லாம் சரிசெய்யப்பட்டு, ஒழுங்கான நிலையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதுபோன்ற குற்றச்சாட்டுகள் இதுவரை எழவில்லை. நீங்கள் சொல்லியிருக்கக்கூடிய குற்றச்சாட்டு குறித்துப் பரிசீலிக்கப்படும்.*

அதுபோல், நீங்கள் சொல்லியிருக்கக்கூடிய அணைக்கட்டில் புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அமைக்க இயலாததற்கு 2009–2010 ஆம் ஆண்டில் புதியதாக சார்–பதிவாளர் அலுவலகங்கள் அமைப்பதை நிறுத்தி வைப்பதென்று ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளதே காரணம். தற்போது பார்த்தீர்களென்றால் மஹாராஷ்டிராவில் 11 கோடி மக்கள் வாழக்கூடிய பகுதியில் 516 சார்–பதிவாளர் அலுவலகங்கள்தான் செயல்படுகின்றன. ஆனால், 7.2 கோடி மக்கள் வாழக்கூடிய நம்முடைய மாநிலத்தில் 578 சார்–பதிவாளர் அலுவலகங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே, மேலும் புதிய சார்–பதிவாளர் அலுவலகங்களை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 11–45

அதே சமயத்தில் நான், 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சென்று, வேண்டிய நடவடிக்கை

[2020 பிப்ரவரி 20

எடுக்கப்படும்' என்று சொன்னால், அடுத்து வருகின்ற ஆண்டிலே நாங்கள்தான் மீண்டும் ஆட்சியில் இருப்போம். மீண்டும் நீங்கள் ஒரு கேள்விக்கணையைத் தொடுப்பீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சென்ற முறை கேட்ட கேள்வியில், 'நான் பரிசீலனை செய்கிறேன் என்று சொன்னீர்கள், இதுவரை புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அமைக்கப்படவில்லை' என்று சொல்வீர்கள். ஏனென்றால், உங்களைப் பற்றி நன்கு அறிந்தவன் என்கின்ற முறையில், அதை அமைப்பதற்கான சாத்தியக்கூறே இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் தளபதி அவர்களை வணங்குகிறேன். பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் சார்–பதிவாளர் அலுவலகம் குறித்து கேட்க விரும்புகிறேன். பல்லாவரத்தில் 1927 ஆம் ஆண்டு, 92 ஆண்டுகளுக்கு முன்பே, 14 கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. அது வளர்ந்து வருகின்ற பகுதி என்ற காரணத்தால் சென்னை புறநகரில் பத்திரப் பதிவு செய்கின்றவர்கள் மிக அதிக அளவில் அங்கே வருகின்றார்கள். ஆகவே, அதைக் கருத்தில்கொண்டு, புதிய பத்திரப் பதிவு அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு, வட்டாட்சியர் அவர்கள் 21–1–2020–ல் மாவட்ட ஆட்சியருக்கு கருத்துருவை அனுப்பியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இடம் தேர்வு செய்யப்பட்டு, நானே இடத்தைத் தேர்வு செய்து வழங்கியிருக்கின்றேன். ஜமீன் பல்லாவரம் சர்வே எண் 214 (களம் புறம்போக்கு), வார்டு 'D' Block, 49–ல் 11 சென்ட் இடத்தை நம்முடைய வட்டாட்சியர் அலுவலகத்திற்கு, கடந்த காலத்தில் நான் இடத்தைத் தேர்வு செய்து, இதே மன்றத்தில் தெரிவித்தேன். அந்தக் கட்டடம் ஒதுக்கீடு செய்து, கட்டப்பட்டு, திறக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அதே இடத்தில் கட்டப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2020 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் பகுதியில் நீண்ட நாட்களாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய கேள்வி இது. அங்கே இடம் ஒதுக்கப்படுவதில் பல்வேறு சிக்கல்கள் மீண்டும் மீண்டும் ஏற்படுகின்றன. அந்தப் பகுதியில் இருக்கும் மக்களிடம் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்ற காரணத்தால், இது தள்ளிச் சென்று கொண்டேயிருக்கிறது. கூடியவிரைவில் அதில் ஒரு முடிவு எடுக்கப்பட்டு புதிய கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

65—

சிறப்புத் திட்டம்

***47231—திரு. S. செம்மலை:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு போக்குவரத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கையை அதிகரிக்க சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரசு போக்குவரத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு போக்குவரத்துக் கழகங்களில் பல்வேறுவிதமான புதிய திட்டங்கள் தீட்டி பயணிகளைக் கவரும் விதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.